2012 மே 9]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 240, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

240—

தொழிற்சாலை

***6138—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், செவ்வாத்தூரில் மைக்கா தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு கனிம நிறுவனம் சென்னைக்கு அருகில் அம்பத்தூரில் ஆண்டு ஒன்றுக்கு 1,600 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் வெர்மிகுலைட் தொழிற்சாலை இயங்கி வருவதானால் புதிய தொழிற்சாலை அமைப்பது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். 1978 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்தில் கனிம வளத் துறையின்மூலம் திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட செவ்வாத்தூர் கிராமத்தில் வெர்மிகுலைட் என்னும் அரிய வகை மூலப்பொருள் வெட்டி எடுக்கப்பட்டு பல வகைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பொருளானது உலகளவில் 3 நாடுகளில் மட்டுமே கிடைக்கின்றது. மிகத் தரம்

வாய்ந்த இந்த அரிய வகை வெர்மிகுலைட் இந்தியாவில் 3 மாநிலங்களில், குறிப்பாக தமிழகத்தில் இருக்கின்ற திருப்பத்தூர் தொகுதியில் செவ்வாத்தூரில் கிடைக்கிறது. இப்பகுதி மக்கள் அதிகளவில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஒரு தொழிற்சாலையைத் தொடங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே திருப்பத்தூர் தொகுதியில் மட்டும்தான் அந்தக் கனிமம் கிடைக்கின்றது. ஏற்கெனவே 1978 ஆம் ஆண்டு சென்னைக்கு அருகில் அம்பத்தூரில் அந்தத் தொழிற்சாலை துவங்கப்பட்டு 1,600 மெட்ரிக் டன் உற்பத்திச் செய்கின்ற அளவிற்கு இருந்துகொண்டிருக்கிறது. இருந்தாலும், சந்தை நிலைமைக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதனைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 241, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

241—

சுற்றுலாத் தலம்

***18556—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—